# வேர்ச்சொல் அறிதல்
# வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல்

## வேர்ச்சொல்

வேர்ச்சொல் என்பது ஒரு சொல்லில் அடிப்படையாக அமைந்துள்ள அதன் பகுதியாகும். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும்.

அறைந்தனன் - அறை
அறியேன் - அறி
அடித்தல் - அடி
அழைக்கும் - அழை
அழைத்தல் - அழை
அமர்வேன் - அமர்
அமர்தல் - அமர்
அகழ்வார் - அகழ்
அடக்கினார் - அடக்கு
அறிகுவர் - அறி
அறிந்து - அறி
அறைகுவன் - அறை
அடைந்த - அடை
அறியாமை - அறி
அறிக - அறி
அறிந்து - அறி
அறிஞர் - அறி
அறிவியல் - அறி
அறிவிப்பு - அறி
அசைத்தான் - அசை
அயர்ந்து - அயர்
அலர்ந்து - அலர்
அழைத்தான் - அழை
அணிந்தேன் - அணி
அமர்ந்தான் - அமர்
அறுத்து - அறு
அமர்ந்தனன் - அமர்

ஆழ்ந்த - ஆழ்
ஆடல் - ஆடு
ஆட்டம் - ஆடு
ஆற்றுவார் - ஆற்று
ஆக்கி - ஆக்கு
ஆற்றுதல் - ஆற்று
ஆசிரியராக்கினார் - ஆசிரியராக்கு
ஆழ்க - ஆழ்
ஆற்றிர் - ஆற்று

இறைஞ்சி - இறைஞ்சு
இணைகின்றன - இணை
இறந்தார் - இற
இரந்து - இர

இருந்த - இரு
இறைஞ்சினான் - இறைஞ்சு
இளைஞர் - இளை
இருந்தாய் - இரு
இடிந்து - இடி

ஈதல் - ஈ
ஈட்டினான் - ஈட்டு
ஈட்டினார் - ஈட்டு
ஈன்ற - ஈன்
ஈந்த - ஈ

உணர்ந்த - உணர்
உரையாமை - உரை
உடையர் - உடை
உயர்கிறான் - உயர்
உரைத்த - உரை
உரைத்தல் - உரை
உரையாடிய - உரை
உடையார் - உடை
உண்கிறான் - உண்
உண்டான் - உண்
உண்பான் - உண்
உண்டிலன் - உண்
உண்டனன் - உண்
உணர்ந்து - உணர்
உணர்ச்சி - உணர்
உலர்ந்து - உலர்
உண்குவர் - உண்
உரைத்தது - உரை
உண்டனெம் - உண்
உணர்த்துவான் - உணர்த்து
உரையார் - உரை
உறங்கினாள் - உறங்கு
உண்கிறேன் - உண்
உறங்கியது - உறங்கு
உயர்ந்தோர் - உயர்
ஊரன் - ஊர்

எய்தும் - எய்து
எய்தல் - எய்து
எழுதினான் - எழுது
எய்துவர் - எய்து
எய்தினான் - எய்து
எழுந்து - எழு
எழுதுக - எழுது
எழுதிலன் - எழுது
எழுதினோர் - எழுது

| | |
|---|---|
| எழுந்த | எழு |
| ஏறுவேன் | ஏறு |
| ஏறுதல் | ஏறு |
| ஏறினாள் | ஏறு |
| ஏகுமின் | ஏகு |
| ஒலித்து | ஒலி |
| ஒறுத்தார் | ஒறு |
| ஒழுகுதல் | ஒழுகு |
| ஒருத்தி | ஒரு |
| ஓம்புவார் | ஓம்பு |
| ஓங்கிய | ஓங்கு |
| ஓடின | ஓடு |
| ஓடினான் | ஓடு |
| ஓடாது | ஓடு |
| ஓட்டுநர் | ஓட்டு |
| ஓம்புமின் | ஓம்பு |
| கண்டேன் | காண் |
| கட்டுதல் | கட்டு |
| கண்டாள் | காண் |
| கடந்து | கட |
| கண்டான் | காண் |
| கற்றனர் | கல் |
| கடாவினார் | கடாவு |
| கழித்தோம் | கழி |
| களைந்தோம் | களை |
| கண்டது | காண் |
| கலங்கி | கலங்கு |
| களைந்து | களை |
| காய்க்கும் | காய் |
| காட்சி | காண் |
| காணுதல் | காண் |
| காணல் | காண் |
| காணாமை | காண் |
| காணலன் | காண் |
| காய்ந்தார் | காய் |
| காப்பார் | கா |
| கிளர்ந்த | கிளர் |
| குமைந்தனை | குமை |
| குறுகினன் | குறுகு |
| கெடுதல் | கெடு |
| கேட்டவர் | கேள் |
| கேட்டார் | கேள் |
| கேட்டான் | கேள் |
| கேட்க | கேள் |
| கேட்ட | கேள் |
| கேளானை | கேள் |
| கொள்வார் | கொள் |
| கொடுத்தோர் | கொடு |
| கொடுத்தான் | கொடு |
| கொண்டாள் | கொள் |
| கொண்ட | கொள் |
| கொலை | கொல் |
| கொணர் | கொணர் |
| கோட்பாடு | கோள் |
| கோடல் | கோடு |
| சரிந்து | சரி |

| | |
|---|---|
| சமைக்கின்றார் | சமை |
| சாக்காடு | சா |
| சாய்ப்பான் | சாய் |
| சாற்றி | சாற்று |
| சிரிக்கிறேன் | சிரி |
| சிரிப்பு | சிரி |
| சிரித்தல் | சிரி |
| சிரிக்காமை | சிரி |
| சீர்த்த | சீர் |
| சுடுதல் | சுடு |
| செய்தாள் | செய் |
| செய்கிறாள் | செய் |
| செய்வாள் | செய் |
| செய்து | செய் |
| செய்த | செய் |
| செய்வீர் | செய் |
| செய்கிறோம் | செய் |
| செய்யாதே | செய் |
| செய்கேன் | செய் |
| சென்றாள் | செல் |
| செலுத்திய | செலுத்து |
| செல்வான் | செல் |
| செய்தான் | செய் |
| செய்யுள் | செய் |
| சென்றனன் | செல் |
| சென்றனர் | செல் |
| சென்ற | செல் |
| செய்தல் | செய் |
| செய்வான் | செய் |
| சென்ற | செல் |
| சேர்ந்தோர் | சேர் |
| சொட்டுதல் | சொட்டு |
| தடுப்பு | தடு |
| தடுத்தல் | தடு |
| தடுக்காமை | தடு |
| தணிந்தது | தணி |
| தட்டுதல் | தட்டு |
| தந்தனன் | தா |
| தருகின்றனர் | தா |
| தமிழச்சி | தமிழ் |
| தருகுவென் | தா |
| தாழால் | தாழ் |
| தாங்கிய | தாங்கு |
| திரும்பினாள் | திரும்பு |
| தீண்டினார் | தீண்டு |
| தீர்த்தோன் | தீர் |
| தீண்டிற்று | தீண்டு |
| துஞ்சான் | துஞ்சு |
| துஞ்சல் | துஞ்சு |
| துய்த்தல் | துய் |
| துய்ப்பேம் | துய் |
| தூங்கினார் | தூங்கு |
| தெளிந்தோர் | தெளி |
| தேரான் | தேர் |
| தேய்ந்த | தேய் |
| தொட்டு | தொடு |
| தொழுதனர் | தொழு |
| தோற்றரவு | தோற்று |
| தோன்றுவர் | தோன்று |

| | |
|---|---|
| நடை | நட |
| நடந்தான் | நட |
| நடந்தாள் | நட |
| நடந்தனர் | நட |
| நடந்தது | நட |
| நடந்தன | நட |
| நடக்கிறாள் | நட |
| நடக்கிறான் | நட |
| நடப்பாள் | நட |
| நடப்பான் | நட |
| நடக்கிறது | நட |
| நடிகன் | நடி |
| நல்கினார் | நல்கு |
| நடவாமை | நட |
| நகை | நகு |
| நிறுத்தல் | நிறுத்து |
| நின்ற | நில் |
| நின்றார் | நில் |
| நிறைந்த | நிறை |
| நிமிர்ந்து | நிமிர் |
| நிகழ்த்தினர் | நிகழ் |
| நின்றான் | நில் |
| நிற்கின்றாய் | நில் |
| நினைக்கின்ற | நினை |
| நீந்தியது | நீந்து |
| நுனித்து | நுனி |
| நெறிப்படுத்தினார் | நெறிப்படுத்து |
| நெருங்கின | நெருங்கு |
| நேர்வான் | நேர் |
| நோக்கி | நோக்கு |

| | |
|---|---|
| பதிந்து | பதி |
| பருகிய | பருகு |
| படித்தவர் | படி |
| பரப்புமின் | பரப்பு |
| பறிக்காதீர் | பறி |
| படிப்பு | படி |
| படிக்காமை | படி |
| படித்தான் | படி |
| பற்றுவான் | பற்று |
| பற்றில்லேன் | பற்று |
| பறவை | பற |
| படர்குவர் | படர் |
| பணிதல் | பணி |
| படர்ந்த | படர் |
| பயின்றாள் | பயில் |
| படித்தாள் | படி |
| படித்து | படி |
| படிக்கிறார் | படி |
| பறித்தார் | பறி |
| பகைத்த | பகை |
| பழித்தனர் | பழி |
| பாடல் | பாடு |
| பார்த்தான் | பார் |
| பாடுகிறாள் | பாடு |
| பாடியவள் | பாடு |
| பாய்வன | பாய் |
| பாரீர் | பார் |
| பார்ப்பேன் | பார் |
| பார்த்தல் | பார் |
| பாடினான் | பாடு |
| பாரான் | பார் |
| பார்க்கிறான் | பார் |
| பாய்த்து | பாய் |
| பார்த்தனன் | பார் |
| பாடுதி | பாடு |
| பிளிறியது | பிளிறு |
| பிறந்தார் | பிற |
| பிரியாமை | பிரி |
| பிரிந்தோர் | பிரி |
| புகுவான் | புகு |
| புளிப்பு | புளி |
| புலவி | புல |
| புக்கான் | புகு |
| புணர்ந்து | புணர் |
| புரிந்த | புரி |
| புகுக | புகு |
| புணர்ந்தார் | புணர் |
| பூக்கும் | பூ |
| பூண்ட | பூண் |
| பெற்றார் | பெறு |
| பெற்றாள் | பெறு |
| பெற்றது | பெறு |
| பெறுதல் | பெறு |
| பெற்றான் | பெறு |
| பெற்றேன் | பெறு |
| பெற்றேன் | பெறு |
| பெற்ற | பெறு |
| பேசினாள் | பேசு |
| பேசான் | பேசு |
| பேசுவார் | பேசு |
| பொருத்துங்கள் | பொருத்து |
| பொளிக்கும் | பொளி |
| பொறுத்தார் | பொறு |
| பொழிந்த | பொழி |
| பொலிந்தான் | பொலி |
| பொறித்த | பொறி |
| பொருந்தி | பொருந்து |
| போகிறது | போ |
| போக்குக | போக்கு |
| போனாள் | போ |
| போனான் | போ |
| போவாள் | போ |
| போவேன் | போ |
| போக்கு | போ |
| போற்றி | போற்று |

| | |
|---|---|
| மயங்கிய | மயங்கு |
| மலைந்து | மலை |
| மடித்தார் | மடி |
| மகிழ்ந்தாள் | மகிழ் |
| மகிழ்ந்தோர் | மகிழ் |
| மலர்ச்சி | மலர் |
| மகிழ்ச்சி | மகிழ் |
| மறத்தல் | மற |
| மறதி | மறதி |
| மறுத்து | மறு |
| மலிந்த | மலி |
| மருண்டனென் | மருள் |

| | | |
|---|---|---|
| மருட்கை | - | மருள் |
| முடுகினன் | - | முடுகு |
| முனிவிலர் | - | முனி |
| முளைத்த | - | முளை |
| மூவர் | - | மூன்று |
| மெலிந்து | - | மெலி |
| மொழியாதான் | - | மொழி |
| வந்தோய் | - | வா |
| வருக | - | வா |
| வந்தேன் | - | வா |
| வருகிறாய் | - | வா |
| வருவோம் | - | வா |
| வந்தீர்கள் | - | வா |
| வருகிறான் | - | வா |
| வந்தார் | - | வா |
| வருகின்றன | - | வா |
| வரும் | - | வா |
| வந்தவர் | - | வா |
| வளர்ப்பாய் | - | வளர் |
| வரைந்தான் | - | வரை |
| வந்தனன் | - | வா |
| வந்தனென் | - | வா |
| வந்தான் | - | வா |
| வருவான் | - | வா |
| வருவார் | - | வா |
| வரவு | - | வர |
| வணங்கிய | - | வணங்கு |
| வருகின்ற | - | வா |
| வந்து | - | வா |
| வாழ்க்கை | - | வாழ் |
| வாழ்வான் | - | வாழ் |
| வாழிய | - | வாழ் |
| விரித்த | - | விரி |
| விளைவது | - | விளை |
| விளக்கி | - | விளக்கு |
| விளம்பினன் | - | விளம்பு |
| விடுத்தல் | - | விடு |
| விடுத்தனை | - | விடு |
| விம்முகின்ற | - | விம்மு |
| விளங்கி | - | விளங்கு |
| வியந்து | - | விய |
| விள்ளல் | - | விள் (பொருள் : விருப்பம்) |
| விண்டல் | - | விள் |
| விழைதல் | - | விள் |
| விழ்ந்தனள் | - | விழ் |
| வென்றார் | - | வெல் |
| வென்றான் | - | வெல் |
| வென்றேன் | - | வெல் |
| வெகுளி | - | வெகுள் |
| வேண்டுகின்றேன் | - | வேண்டு |
| வேண்டி | - | வேண்டு |
| வேண்டிய | - | வேண்டு |
| வைப்பர் | - | வை |
| வைத்தார் | - | வை |
| வைத்து | - | வை |

## TNPSC Old Questions
## கட்டாயத் தமிழ்

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (CEGS/2024)
நடக்கிறது
அ) நடக்
ஆ) நடக்கும்
இ) நடந்த
ஈ) நட
உ) விடை தெரியவில்லை

வேர்ச்சொற்களைத் தேர்வு செய்க (HSGS/2024)
அறிஞர்
அ) அறிஞன்
ஆ) அரி
**இ) அறி**
ஈ) அறு

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல். (CTNGS/2024)
கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.
வேர்ச்சொல் வினைமுற்று
அ) சென்று - சென்றார்
**ஆ) காண் - கண்டேன்**
இ) கேட் - கேட்டார்
ஈ) பயின் - பயின்றாள்

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல். (CTNGS/2024)
கீழ்க்கண்டவற்றுள் தவறான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.
வேர்ச்சொல் - வினைமுற்று
அ) வா (வரு) - வருக
ஆ) தீர் - தீர்த்தோன்
**இ) வீழ்ந்த - வீழ்ந்தனள்**
ஈ) உரை - உரைத்தது

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல். சரியான இணையைத் தேர்க. (CTNGS/2024)
வேர்ச்சொல் - வினைமுற்று
**அ) நட - நடக்கிறது**
ஆ) உண்ட - உண்கிறேன்
இ) பேசி - பேசினாள்
ஈ) போன - போனான்
உ) விடை தெரியவில்லை

'மகிழ்' எனும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்க (MIGS/2023)
அ) மகிழ்ச்சி
ஆ) மகிழ்தல்
**இ) மகிழ்ந்தோர்**
ஈ) மகிழ்ந்தார்

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக. (CTNGS/2024)
பாடு
**அ) பாடியவள்**
ஆ) பாடுதல்
இ) பாடுகின்றாள்
ஈ) பாடினாள்
உ) விடை தெரியவில்லை

'தருகின்றனர்' - இதன் வேர்ச்சொல் அறிக. (CSGS/2023); (VCGS/2022); (CEGS/2024), (MIGS/2023)
**அ) தா**
ஆ) தந்த
இ) தரு
ஈ) தந்து

கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக. (HSGS/2024)
**அ) நட - நடக்கிறது**
ஆ) கேட்டு - கேட்டார்
இ) வாழி - வாழியர்
ஈ) சென்று - சென்றனர்

'உரைத்த' - வேர்ச்சொல்லை அறிக (JADLGS/23)
அ) உரைத்து
ஆ) உரைத்தது

இ) உரை ஈ) உரைக்கப் பட்ட

'பேசினாள்'-இதன் வேர்ச்சொல்லை அறிக. (RAGS/2023)
அ) பேசி ஆ) பேசிய
இ) பேசு ஈ) பேசியது

வேர்ச்சொல்லைக் கண்டறிக - 'உரைத்தல்' (GSGS/2023)
அ) உரைக்க ஆ) உரைத்து
இ) உரைத்த ஈ) உரை

குமைந்தனை - வேர்ச்சொல்லைத் தருக (PCTS/2024)
அ) குமைந்த ஆ) குமைந்து
இ) குமைத்த ஈ) குமை

உரைத்த - வேர்ச்சொல்லைத் தருக : (AAOGS/2024)
அ) உரை ஆ) உரைத்து
இ) உரைந்து ஈ) உறை

கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக. (AAOGS/2024)
அ) வரு - வருக ஆ) கிள - கிளர்ந்த
இ) பொறி - பொறித்த ஈ) மயங்கி - மயங்கிய

பின்வரும் வினைமுற்றின் வேர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக (HSGS/2024)
பார்த்தான்
அ) பார்க்க ஆ) பாரு
இ) பார் ஈ) பார்த்த

விளைவது - வேர்ச் சொல்லைத் தருக. (EOIGS/2024)
அ) விளை ஆ) விலை
இ) விழை ஈ) விளைந்து

அறியேன் - வேர்ச் சொல்லைத் தருக. (BEGS/2023); (EOIGS/2024)
அ) அரி ஆ) அறி
இ) அறிந்த ஈ) அரிந்த

"காண்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக. (CEGS/2024)
அ) உண்டேன் ஆ) கண்டேன்
இ) பார்ப்பேன் ஈ) கற்பேன்

கொடுத்தோர் - வேர்ச்சொல்லைக் கண்டறி (CTSE2024)
அ) கொடுத்து ஆ) கொடுத்த
இ) கொடு ஈ) கொடுத்தார்

போவாள் - வேர்ச் சொல்லை கண்டறிக (CTSE2024)
அ) போ ஆ) போகின்றாள்
இ) போகின்ற ஈ) போது

பொறித்த - வேர்ச்சொல்லை எழுதுக (MIGS/2023), (RAMGS/2023)
அ) பொறித்த ஆ) பொறி
இ) பொறிக்கப்பட்ட ஈ) பொறிக்கப்பட்டு

வேர்ச் சொல்லைத் தேர்வு செய்தல் : (MIGS/2023)
'பாடுகிறாள்' என்னும் சொல்லின் வேர்ச் சொல் காண்க.
அ) பா ஆ) பாடு
இ) பாட்டு ஈ) பாடி

'கிளர்ந்த' வேர்ச்சொல் அறிக (JADLGS/23)
அ) கிளர் ஆ) கிளர்ச்சி
இ) கிளர்ந்து ஈ) கிளர்க்கப் பட்டு

வேர்ச் சொல்லைத் தேர்வு செய்தல். (RAMGS/2023)
'வந்தேன்' என்னும் சொல்லின் வேர்ச் சொல் காண்க.
அ) வ ஆ) வருக
இ) வா ஈ) வருதல்

கொடுக்கப்பட்டுள்ள தொழிற்பெயரிலிருந்து வேர்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக. (HSGS/2024)
படித்தல்
அ) படு ஆ) படி
இ) படித்து ஈ) படித்த

படித்தான் - வேர்ச் சொல்லைத் தருக (AOGS/2023)
அ) பாடம் ஆ) படி
இ) படு ஈ) பாடு

'வருதல்' என்பதன் வேர்ச்சொல்லைக் கண்டறிக. (APPGS/2023)
அ) வந்தான் ஆ) வரு
இ) வா ஈ) வந்த

வேர்ச்சொல்லைக் கண்டறிக (VSGS/2023)
'வாழ்க்கை'
அ) வாழ் ஆ) வாழ்க
இ) வாழு ஈ) வாழி

கண்டான் - வேர்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க. (BEGS/2023)
அ) கண் ஆ) காண்
இ) கண்டு ஈ) கண்ட

வேர்ச்சொல்லைக் காண்க : 'சுடுதல்' (HOGS/2023)
அ) சுடு ஆ) தடு
இ) சுடுக ஈ) சுட்ட

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (IFGS/2023)
வருகிறான்
அ) வரு ஆ) வா
இ) வருதல் ஈ) வருகி

வந்தவர் - என்பதன் வேர்ச்சொல் எழுதுக. (IFGS/2023)
அ) வரு ஆ) வா
இ) வந்த ஈ) வருதல்

வேர்ச்சொல்லைத் தெரிவு செய்க. (IFGS/2023); (EO1GS/2022)
வென்றார்
அ) வென் ஆ) வெல்
இ) வென்று ஈ) வெள்

வந்தான் - என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக. (SFGS/2023)
அ) வந்த ஆ) வரு
இ) வா ஈ) வந்து

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல் (SFGS/2023)
கொடுத்தான்
அ) கொடு ஆ) கொடுத்து
இ) கொடுத்த ஈ) கொடுக்கின்றான்

"தருகுவென்" - என்பதன் வேர்ச்சொல் கண்டறிக. (CSGS/2023)

அ) தரு | ஆ) தருகு
இ) தா | ஈ) தருவேன்

"காப்பார்" - என்பதன் வேர்ச்சொல் கண்டறிக. (CSGS/2023)

அ) காப்பு | ஆ) காத்து
இ) கா | ஈ) காத்தான்

'வருக' - என்பதன் வேர்ச்சொல் தருக. (LEGS/2023); (SDGS/2022); (CASEGS/2024)

அ) வரு | ஆ) வாரு
இ) வா | ஈ) வந்து

"அறைந்தனன்" வேர்ச்சொல்லைத் தருக. (RAGS/2023)

அ) அறை | ஆ) அறைந்து
இ) அறைந்த | ஈ) அறைதல்

"தொட்டு"-வேர்ச்சொல்லைத் தருக. (LEGS/2023)

அ) தொண் | ஆ) தொட்டு
இ) ஒடு | ஈ) தொடு

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (AOGS/2022), (CESGS/2023)

சென்றனர்

அ) செல்க | ஆ) சென்ற
இ) சென்று | ஈ) செல்

வேர்ச்சொல்லைத் தேர்ந்தெடுத்தெழுதுக. (LEGS/2023); (PSGS/2022)

பயின்றாள் ____________

அ) பயின்று | ஆ) பயின்ற
இ) பயில் | ஈ) பயில

"நின்றான்" - என்பதன் வேர்ச்சொல் கண்டறிக. (HOGS/2023)

அ) நில் | ஆ) நின்று
இ) நின் | ஈ) நில்லு

வேர்ச்சொல்லை தேர்வு செய்தல் (EO1GS/2022)

நடக்கிறான்

அ) நடப்பான்
ஆ) நட
இ) நடக்கிறது
ஈ) நடந்து கொண்டு இருப்பான்

'படி' என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக. (DPGS/2022)

அ) படித்தான் | ஆ) பாடினான்
இ) கற்றான் | ஈ) கற்பனை

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (PSGS/2022); (RAMGS/2023); (RAGS/2023)

கேட்டார்

அ) கேட் | ஆ) கேட்ட
இ) கேட்டு | ஈ) கேள்

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல் (AOGS/2022)

நடந்தாள்

அ) நட | ஆ) நடக்கிறாள்
இ) நடக்குவாள் | ஈ) நடப்பாள்

வேர்ச்சொல்லை தேர்வு செய்க. (VCGS/2022)

"ஓடினான்"

அ) ஓடி | ஆ) ஓடு
இ) ஓடின | ஈ) ஓடிய

நடப்பாள் - இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் கண்டறிக (REGS/2022)

அ) நடந்த | ஆ) நட
இ) நடந்து | ஈ) நடந்தன

உறங்கினாள் - வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லைக் கண்டறிக. (CSGS/2023)

அ) உற | ஆ) உறங்
இ) உறங்கு | ஈ) உறங்குதல்

வேர்ச்சொல்லைக் கண்டறிக : (GSGS/2023)

'விரித்த'

அ) விரித்து | ஆ) விரி
இ) விர் | ஈ) வீர்

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'மயங்கிய' சரியான வேர்ச்சொல்லை தேர்ந்தெடு. (CCS3T-2023)

அ) மயங்கினான் | ஆ) மயங்கிய
இ) மயங்கு | ஈ) மயங்கினாள்

'நிறுத்தல்' என்ற சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (CCS3T-2023)

அ) நிறுத்து | ஆ) நீறு
இ) நின்று | ஈ) நிறுவு

'வந்தனன்' இச்சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்ந்தெடு (GTGS-2022); (ATOGS/2023); (SFGS/2023)

அ) வந்த | ஆ) வந்தான்
இ) வா | ஈ) வருவான்

'பரப்புமின்' இச்சொல்லின் வினையடியைத் தேர்ந்தெடு. (GTGS-2022)

அ) பரப்பினான் | ஆ) பரப்பு
இ) பர | ஈ) பரப்பினர்

'போ' என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை தேர்ந்தெடுக்க. (SGTS-2012)

அ) போக்கிய | ஆ) போனவன்
இ) போனான் | ஈ) போக்கு

...

கோர்வை / கோவை

கோ என்பது வேர்ச்சொல். கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி.

(எ.கா.)

ஆசாரக்கோவை

ஊசியில் நூலைக் கோத்தான்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

கோ - என்னும் வேர்ச்சொல்லில் உருவான சரியான தொடர் எது? (EO4GT/2019)

அ) கோத்தல், கோட்டை, கோப்பு
ஆ) கோத்தல், கோவை, கோப்பு
இ) கோத்தல், கோலம், கோப்பு
ஈ) கோத்தல், கோணல், கோப்பு

வழூஉச் சொல்லற்ற தொடர் எது? (SDGS/2022)
அ) ஊசியில் நூலைக் கோர்த்தான்.
ஆ) ஊசியில் நூலைக் கோர்ப்பான்.
இ) ஊசியில் நூலைக் கோத்தான்.
ஈ) ஊசியில் நூலைக் கோர்க்கலாம்.

---

## வேர்ச்சொல்லைக் கொடுத்து, வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர் மற்றும் தொழிற்பெயரை உருவாக்கல்

**வினைமுற்று :**

தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்று என்பர்.

(எ.கா.)
நடந்தான், வந்தான், படித்தாள், சென்றாள்.

**வினையெச்சம் :**

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். அஃதாவது, ஓர் எச்சவினை, வினையைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். வினையெச்ச விகுதிகள் - **உ, இ**

(எ.கா.)
நடந்து, வந்து, படித்து, சென்று.

**பெயரெச்சம் :**

ஓர் எச்சவினை பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும். பெயரெச்ச விகுதிகள் - **அ, உம்**

(எ.கா.)
நடந்த, வந்த, படித்த, சென்ற

**தொழிற்பெயர் :**

ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.)
நடத்தல், வருதல், படித்தல் / படிப்பு, செல்தல்

**வினையாலணையும் பெயர் ;**

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

(எ.கா.)
நடந்தவர், வந்தவர், படித்தவர், சென்றவர்.

அடிச்சொல் : **வா**
- வினைமுற்று - வந்தான் / வந்தாள்
- பெயரெச்சம் - வந்த
- வினையெச்சம் - வந்து
- தொழிற்பெயர் - வருதல்
- வினையாலணையும் பெயர் - வந்தவர்

அடிச்சொல் : **படி**
- வினைமுற்று - படித்தான் / படித்தாள்
- பெயரெச்சம் - படித்த
- வினையெச்சம் - படித்து
- தொழிற்பெயர் - படித்தல் / படிப்பு
- வினையாலணையும் பெயர் - படித்தவர்

அடிச்சொல் : **நட**
- வினைமுற்று - நடந்தான்
- வினையெச்சம் - நடந்து
- பெயரெச்சம் - நடந்த
- தொழிற்பெயர் - நடத்தல்
- வினையாலணையும் பெயர் - நடந்தவர்

அடிச்சொல் : **பாடு**
- வினைமுற்று - பாடினான் / பாடினாள்
- வினையெச்சம் - பாட / பாடி
- பெயரெச்சம் - பாடிய
- தொழிற்பெயர் - பாடல் / பாடுதல்
- வினையாலணையும் பெயர் - பாடியவர்

அடிச்சொல் : **செய்**
- வினைமுற்று - செய்தான்
- வினையெச்சம் - செய்து
- பெயரெச்சம் - செய்த
- தொழிற்பெயர் - செய்தல்
- வினையாலணையும் பெயர் - செய்தவர்

அடிச்சொல் : **ஓடு**
- வினைமுற்று - ஓடினான்
- வினையெச்சம் - ஓடி
- பெயரெச்சம் - ஓடிய
- தொழிற்பெயர் - ஓடுதல் / ஓட்டம்
- வினையாலணையும் பெயர் - ஓடியவர்

அடிச்சொல் : **செல்**
- வினைமுற்று - சென்றான்
- வினையெச்சம் - சென்று
- பெயரெச்சம் - சென்ற
- தொழிற்பெயர் - செல்தல்
- வினையாலணையும் பெயர் - சென்றவர்

அடிச்சொல் : **தா**
- வினைமுற்று - தந்தான்
- வினையெச்சம் - தந்து
- பெயரெச்சம் - தந்த
- தொழிற்பெயர் - தருதல்
- வினையாலணையும் பெயர் - தந்தவர்

அடிச்சொல் : **கேள்**

- வினைமுற்று - கேட்டான்
- வினையெச்சம் - கேட்டு
- பெயரெச்சம் - கேட்ட
- தொழிற்பெயர் - கேட்டல்
- வினையாலணையும் பெயர் - கேட்டவர்

அடிச்சொல் : **கொடு**

- வினைமுற்று - கொடுத்தான்
- வினையெச்சம் - கொடுத்து
- பெயரெச்சம் - கொடுத்த
- தொழிற்பெயர் - கொடுத்தல்
- வினையாலணையும் பெயர் - கொடுத்தோர்

அடிச்சொல் : **பார்**

- வினைமுற்று - பார்த்தான்
- வினையெச்சம் - பார்த்து
- பெயரெச்சம் - பார்த்த
- தொழிற்பெயர் - பார்த்தல்
- வினையாலணையும் பெயர் - பார்த்தவர்

அடிச்சொல் : **காண்**

- வினைமுற்று - கண்டான்
- வினையெச்சம் - கண்டு
- பெயரெச்சம் - கண்ட
- தொழிற்பெயர் - காணல், காணுதல்
- வினையாலணையும் பெயர் - கண்டவர்

அடிச்சொல் : **பெறு**

- வினைமுற்று - பெற்றான்
- வினையெச்சம் - பெற்று
- பெயரெச்சம் - பெற்ற
- தொழிற்பெயர் - பெறுதல்
- வினையாலணையும் பெயர் - பெற்றவர்

அடிச்சொல் : **நீந்து**

- வினைமுற்று - நீந்தினான்
- வினையெச்சம் - நீந்தி
- பெயரெச்சம் - நீந்திய
- தொழிற்பெயர் - நீந்துதல்
- வினையாலணையும் பெயர் - நீந்தியவர்

அடிச்சொல் : **கொடு**

- வினைமுற்று - கொடுத்தான்
- வினையெச்சம் - கொடுத்து
- பெயரெச்சம் - கொடுத்த
- தொழிற்பெயர் - கொடுத்தல்
- வினையாலணையும் பெயர் - கொடுத்தவர்

அடிச்சொல் : **சிரி**

- வினைமுற்று - சிரித்தான்
- வினையெச்சம் - சிரித்து
- பெயரெச்சம் - சிரித்த
- தொழிற்பெயர் - சிரிப்பு / சிரித்தல்
- வினையாலணையும் பெயர் - சிரித்தவர்

அடிச்சொல் : **தடு**

- வினைமுற்று - தடுத்தான்
- வினையெச்சம் - தடுத்து
- பெயரெச்சம் - தடுத்த
- தொழிற்பெயர் - தடுப்பு / தடுத்தல்
- வினையாலணையும் பெயர் - தடுத்தவர்

அடிச்சொல் : **கல்**

- வினைமுற்று - கற்றான்
- வினையெச்சம் - கற்று
- பெயரெச்சம் - கற்ற
- தொழிற்பெயர் - கற்றல்
- வினையாலணையும் பெயர் - கற்றவர்

அடிச்சொல் : **அடக்கு**

- வினைமுற்று - அடக்கினான்
- வினையெச்சம் - அடக்கி
- பெயரெச்சம் - அடக்கிய
- தொழிற்பெயர் - அடக்குதல்
- வினையாலணையும் பெயர் - அடக்கியவர்

அடிச்சொல் : **பெறு**

- வினைமுற்று - பெற்றான்
- வினையெச்சம் - பெற்று
- பெயரெச்சம் - பெற்ற
- தொழிற்பெயர் - பெறுதல்
- வினையாலணையும் பெயர் - பெற்றவர்

அடிச்சொல் : **வரை**

- வினைமுற்று - வரைந்தான்
- வினையெச்சம் - வரைந்து
- பெயரெச்சம் - வரைந்த
- தொழிற்பெயர் - வரைதல்
- வினையாலணையும் பெயர் - வரைந்தவர்

அடிச்சொல் : **பொறு**

- வினைமுற்று - பொறுத்தான்
- வினையெச்சம் - பொறுத்து
- பெயரெச்சம் - பொறுத்த
- தொழிற்பெயர் - பொறுத்தல்
- வினையாலணையும் பெயர் - பொறுத்தார்

அடிச்சொல் : **எறி**

- வினைமுற்று - எறிந்தான்
- வினையெச்சம் - எறிந்து
- பெயரெச்சம் - எறிந்த
- தொழிற்பெயர் - எறிதல்
- வினையாலணையும் பெயர் - எறிந்தவர்

அடிச்சொல் : **ஆடு**

- வினைமுற்று - ஆடினான்
- வினையெச்சம் - ஆடி
- பெயரெச்சம் - ஆடிய
- தொழிற்பெயர் - ஆடுதல்
- வினையாலணையும் பெயர் - ஆடியவர்

அடிச்சொல் : **நடி**

- வினைமுற்று - நடித்தான்
- வினையெச்சம் - நடித்து
- பெயரெச்சம் - நடித்த
- தொழிற்பெயர் - நடித்தல், நடிப்பு
- வினையாலணையும் பெயர் - நடித்தவர்

அடிச்சொல் : **உண்**

- வினைமுற்று - உண்டான்

- வினையெச்சம் - உண்டு
- பெயரெச்சம் - உண்ட
- தொழிற்பெயர் - உண்ணுதல் / உண்ணல்
- வினையாலணையும் பெயர் - உண்டவர்

அடிச்சொல் : **நில்**

- வினைமுற்று - நின்றான்
- வினையெச்சம் - நின்று
- பெயரெச்சம் - நின்ற
- தொழிற்பெயர் - நிற்றல்
- வினையாலணையும் பெயர் - நின்றவர்

அடிச்சொல் : **பேசு**

- வினைமுற்று - பேசினான்
- வினையெச்சம் - பேசி
- பெயரெச்சம் - பேசிய
- தொழிற்பெயர் - பேசுதல்
- வினையாலணையும் பெயர் - பேசியவர்

அடிச்சொல் : **வளர்**

- வினைமுற்று - வளர்த்தான்
- வினையெச்சம் - வளர்த்து
- பெயரெச்சம் - வளர்த்த
- தொழிற்பெயர் - வளர்த்தல்
- வினையாலணையும் பெயர் - வளர்த்தவர்

அடிச்சொல் : **தேடு**

- வினைமுற்று - தேடினான்
- வினையெச்சம் - தேடி
- பெயரெச்சம் - தேடிய
- தொழிற்பெயர் - தேடுதல்
- வினையாலணையும் பெயர் - தேடியவர்

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

வினைமுற்றைத் தேர்வு செய்க. (CCSE2T/2024)
"வா"
அ) வந்தனன் ஆ) வந்து
**இ) வந்தான்** ஈ) வந்த

வினையெச்சம் - கண்டறிக. (CCSE2T/2024)
அ) ஓடினான் ஆ) ஓடும்
இ) ஓடிய **ஈ) ஓடி**

'வா' என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்று (CCSE4GT/2024)
**அ) வந்தாள்** ஆ) வந்த
இ) வந்து ஈ) வந்தவர்

தா என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர்______ (CCSE4GT/2024)
அ) தந்து ஆ) தந்த
இ) தந்தது **ஈ) தந்தவர்**

'நட' என்ற வேர்ச்சொல்லின் தொழில் பெயரை அறிக. (CCS3T-2023)
அ) நடந்து **ஆ) நடத்தல்**
இ) நடந்த ஈ) நடந்தான்

## TNPSC Old Questions
## கட்டாயத் தமிழ்

நட- வேர்ச்சொல்லை வினைமுற்றாக தேர்ந்தெடு (CTND003GS/2024)
அ) நடத்தல் **ஆ) நடந்தான்**
இ) நடப்பவை ஈ) நடப்பு

வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக. (CTNGS/2024)
காண்
அ) கண்டல் ஆ) காண்க
**இ) காணுதல்** ஈ) கண்டான்
உ) விடை தெரியவில்லை

வேர்ச்சொல்லுக்குரிய வினையாலணையும் பெயர் காண்க : (CTND003GS/2024)
'தா'
**அ) தந்தவன்** ஆ) தந்தான்
இ) தருதல் ஈ) தந்து
உ) விடை தெரியவில்லை

வேர்ச் சொல்லின் வினைமுற்றைக் காண்க. (EOIGS/2024)
பாடி
அ) பாடு ஆ) பாடின
இ) பாடிய **ஈ) பாடினாள்**

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க : (CTND003GS/2024)
'கொடு'
அ) கொடுத்தான் **ஆ) கொடுத்தல்**
இ) கொடுத்தவன் ஈ) கொடுத்து

வேர்ச் சொல்லைத் தேர்வு செய்க "செய்தான்" (PCTS/2024)
அ) செய்தல் **ஆ) செய்**
இ) செய்த ஈ) செய்யும்

'தா'- என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் தருக : (CASEGS/2024)
அ) தந்தான் **ஆ) தருதல்**
இ) தந்த ஈ) தந்து

'கொடு' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்க (CASEGS/2024)
அ) கொடுத்தார் ஆ) கொடுப்பார்
**இ) கொடுத்தோர்** ஈ) கொடுத்தோம்

கொடுக்கப்பட்டுள்ள வேர்ச்சொல்லின் வினைமுற்று கண்டறிக. (AAOGS/2024)
'காண்'
அ) கண்டவன் ஆ) காணான்
**இ) கண்டான்.** ஈ) கண்டு

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க - "பொறு" (CTND003GS/2024)
அ) பொறுத்த ஆ) பொறுத்தல்
**இ) பொறுத்தார்** ஈ) பொறுத்து

"ஆடினான்" - வேர்ச் சொல்லைத் தருக. (AAOGS/2024)
அ) ஆடுகிறாள் ஆ) ஆடுதல்

இ) ஆடி ஈ) ஆடு

வேர்ச்சொல்லை பெயரெச்சமாக்குக. (AAOGS/2024)
பெறு
அ) பெற்று ஆ) **பெற்ற**
இ) பெற்றான் ஈ) பெற்று விட்டான்

வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்றை அறிதல் :
பேசு (CEGS/2024)
அ) பேசிய ஆ) **பேசினான்**
இ) பேசுதல் ஈ) பேசி

ஓடு என்ற வேர்ச்சொல்லின் பெயரெச்சமும் வினையெச்சமும் (RAMGS/2023)
அ) ஓடி, ஓடிய ஆ) ஓடியது, ஓடிய
இ) ஓடிய, ஓடியது ஈ) **ஓடிய, ஓடி**

'நட' என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைத் தேர்வு செய்க. (CASEGS/2024), (MIGS/2023)
அ) நட ஆ) நடந்து
இ) **நடத்தல்** ஈ) நடத்து

'கல்' எனும் வேர்ச்சொல்லின் பெயரெச்ச சொல்லைக் கண்டறிக. (JADLGS/23)
அ) கல்வி ஆ) **கற்ற**
இ) கற்று ஈ) கற்றான்

'உண்- என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் தருக. (RAMGS/2023)
அ) **உண்ணல்** ஆ) உண்டாள்
இ) உண்ட ஈ) உண்டு

'ஆடு' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் வடிவம் தருக. (DPGS/2022)
அ) ஆடுதல் ஆ) ஆடி
இ) **ஆடியவன்** ஈ) ஆடினான்

'ஆடு' என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினைஎச்சத்தை உருவாக்குக. (DPGS/2022)
அ) **ஆடி** ஆ) ஆடிய
இ) ஆடுதல் ஈ) ஆடினான்

## மேலும் சில வேர்ச்சொல் வினாக்கள் :

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

நடப்பேன் - வேர்ச் சொல்லைக் கண்டறி (CTSE2024)
அ) நடந்தான் ஆ) நாடு
இ) **நட** ஈ) நாடா

'வாருங்கள்' - வேர்ச்சொல்லைத் தருக. (CASEGS/2024)
அ) வாரும் ஆ) **வா**
இ) வரு ஈ) வந்து

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க (CTSE2024)
'உணர்'
அ) உணர்ந்து ஆ) உணர்ந்த
இ) **உணர்ந்தோர்** ஈ) உணர்ந்தான்

வேர்ச்சொல்லின் எதிர்மறைத் தொழிற்பெயரைக் காண்க. (CTSE2024)
உரை
அ) உரைக்கின்றார் ஆ) **உரையாமை**
இ) உரைத்த ஈ) உரைப்பவர்

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க. (CTSE2024)
'முளை'
அ) முளைத்தவன் ஆ) முளைத்து
இ) முளைத்த ஈ) **முளைத்தல்**

'விதை' என்ற வேர்ச்சொல்லின் எதிர்மறைத் தொழிற் பெயர் (PCTS/2024)
அ) விதைத்தல் ஆ) **விதையாமை**
இ) விதைக்காதிரு ஈ) விதைப்பது

'ஆள்' எனும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக (PCTS/2024)
அ) ஆளுதல் ஆ) **ஆளல்**
இ) ஆள்க ஈ) ஆளு

வேர்ச்சொல்லின் வினைமுற்றை காண்க. (AAOGS/2024)
குமை
அ) குமைந்தல் ஆ) குமைந்து
இ) குமைந்த ஈ) **குமைந்தன**

வேர்ச்சொல்லைத் தெரிவு செய்க (BEGS/2023)
'படித்தவர்' என்ற வினையாலணையும் பெயரின் வேர்ச்சொல்லை காண்க.
அ) **படி** ஆ) படித்த
இ) படித்தல் ஈ) படித்து

கொல்லாமை - என்ற எதிர்மறை தொழிற்பெயரிலிருந்து வேர்ச்சொல்லை எழுதுக. (SFGS/2023)
அ) **கொல்** ஆ) கொல்லு
இ) கொல்லுதல் ஈ) கொல்லா

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (CESGS/2023)
"உரைத்தான்"
அ) உரைத்தாள் ஆ) உரைத்த
இ) உரைத்து ஈ) **உரை**

வேர்ச்சொல்லைக் கண்டறிக. 'கற்றார்' (CESGS/2023)
அ) கற் ஆ) **கல்**
இ) கற்று ஈ) கற்ற

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க (VSGS/2023)
'துய்ப்பது'
அ) **துய்** ஆ) துய்த்த
இ) துய்த்து ஈ) துய்ப்பதால்

பின்வரும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் யாது? (MIGS/2023)
உண்
அ) உண்ண ஆ) உண்ணுதல்
இ) **உண்கின்றவன்** ஈ) உண்ட

வேர்ச்சொல்லைக் கொடுத்து வினையாலணையும் பெயர் உருவாக்கல் : (ATOGS/2023)
'ஒறுத்தல்' - வினையாலணையும் பெயர் காண்க.
அ) ஒறுத்தினேன் ஆ) ஒறுத்தார்
இ) ஒன்றுதல் ஈ) பொறுத்தல்

'பதி' என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்வு செய்க. (RAMGS/2023)
அ) பதிந்த ஆ) பதித்த
இ) பதிந்து ஈ) பதியா

'மலை' என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சத்தைத் தேர்க : (ATOGS/2023)
அ) மலைந்து ஆ) மலைந்த
இ) மலையா ஈ) மலையும்

வேர்ச்சொல்லுக்குரிய தொழிற்பெயரை எழுதுக : (ATOGS/2023)
'கொடு'
அ) கொடுத்தான் ஆ) கொடுத்த
இ) கொடுத்தல் ஈ) கொடுத்தவன்

வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக: (ATOGS/2023)
'வருக'
அ) வா ஆ) வரு
இ) வந்து ஈ) வருகிறார்

'ஓடு' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்ந்தெடுக்க. (APPGS/2023)
அ) ஓடுதல் ஆ) ஓடி
இ) ஓடினான் ஈ) ஓடிய

வேர்ச்சொல்லில் இருந்து வினை முற்றை உருவாக்குக (VSGS/2023)
'பெறு'
அ) பெற்று ஆ) பெற்றாள்
இ) பேறு ஈ) பெறுக

"சிரி" என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினை எச்சத்தை உருவாக்குக (VSGS/2023)
அ) சிரித்து ஆ) சிரிப்பு
இ) சிரித்த ஈ) சிரித்தல்

'உரை எனும் வேர்ச்சொல்லின் தொழிற் பெயரைத் தேர்க. (JADLGS/23)
அ) உரையாமை ஆ) உரைத்தோர்
இ) உரைத்தவர் ஈ) உரைத்தவன்

உண் - என்ற வேர்ச்சொல்லின் வினையெச்ச வடிவம் தருக. (VSGS/2023)
அ) உண்டான் ஆ) உண்ட
இ) உண்ணுதல் ஈ) உண்டு

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க (BEGS/2023)
பாடு
அ) பாடுதல் ஆ) பாடுக
இ) பாடிய ஈ) பாடியவள்

பாடு - என்பதன் பெயரெச்சத்தை தேர்க. (HOGS/2023)
அ) பாடிய ஆ) பாடுதல்
இ) பாடினேன் ஈ) பாடியவர்

'எழுது' எனும் வேர்ச்சொல்லின் வினைமுற்று சொல்லைக் கண்டறிக. (IFGS/2023)
அ) எழுதுக ஆ) எழுதினாள்
இ) எழுதுதல் ஈ) எழுதிய

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க : "காண்" (IFGS/2023)
அ) கண்டான் ஆ) கண்டு
இ) கண்ட ஈ) காணல்

வேர்ச்சொல்லைக் கொடுத்து வினையெச்சம் உருவாக்கல் (IFGS/2023)
கொடு
அ) கொடுத்தான் ஆ) கொடுத்து
இ) கொடுக்கிறான் ஈ) கொடுத்த

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க : "நட" (IFGS/2023)
அ) நடந்து ஆ) நடத்தல்
இ) நடப்பான் ஈ) நடந்தவன்

'படி' - என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தொழிற்பெயரை உருவாக்குக. (SFGS/2023)
அ) படித்து ஆ) படித்தல்
இ) படித்த ஈ) படிக்க

வேர்ச்சொல்லை வினையாலணையும் பெயராக்குக (SFGS/2023)
பார்
அ) பார்த்தவன் ஆ) பார்த்து
இ) பார்த்த ஈ) பார்த்தல்

வேர்ச்சொல்லைக் கொண்டு வினையெச்சத்தை உருவாக்கல் (SFGS/2023)
தா
அ) தந்து ஆ) தந்த
இ) தந்தான் ஈ) தருதல்

பின்வரும் தொடரில் வினைச்சொல்லைக் கண்டறிந்து அதன் வேர்ச்சொல்லை எழுதுக. (JADLGS/23)
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
அ) வலம் ஆ) பொறி
இ) தடம் ஈ) மா
உ) விடை தெரியவில்லை

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க
படி (CSGS/2023)
அ) படித்த ஆ) படித்தவர்
இ) படித்து ஈ) படித்தது

'உண்' - எனும் வேர்ச்சொல்லில் இருந்து வினையாலணையும் பெயரைக் கண்டுபிடிக்க. (CSGS/2023)
அ) உண்டான் ஆ) உண்டவன்
இ) உண்டு ஈ) உண்ட

பின்வரும் வேர்ச்சொல்லுக்குரிய வினைமுற்றைக் கண்டறி: (CSGS/2023)
தா
அ) தந்த ஆ) **தருகின்றனர்**
இ) தந்து ஈ) தந்தவர்

'சிரி' எனும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் வடிவம் தருக. (CSGS/2023)
அ) சிரித்து ஆ) **சிரித்தவள்**
இ) சிரித்த ஈ) சிரித்தல்

'மகிழ்' என்ற சொல்லின் வினையாலணையும் பெயரைத் தெரிவு செய்க. (CESGS/2023)
அ) மகிழ்ந்தார் ஆ) **மகிழ்ந்தோர்**
இ) மகிழ்ச்சி ஈ) மகிழ்ந்த

"சரி" என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சம் தருக. (LEGS/2023)
அ) சரிந்த ஆ) சரிந்தனர்
இ) சரிதல் **ஈ) சரிந்து**

"தணி" என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று கண்டறி. (DMGS/23)
அ) தணிதல் ஆ) **தணிந்தது**
இ) தணிந்து ஈ) பணிந்தது

'எழுது' என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினை எச்சத்தை உருவாக்குக. (CESGS/2023)
அ) எழுதிய ஆ) **எழுதி**
இ) எழுதினான் ஈ) எழுதுக

வேர்ச்சொல்லின் வழி வினையெச்சம் கண்டறிக. (LEGS/2023)
பாடு ________________
**அ) பாடி** ஆ) பாடியவன்
இ) பாடிய ஈ) பாட்டு

வேர்ச்சொல்லில் இருந்து தொழிற்பெயரை ஆக்குதல் (DMGS/23)
கட்டு
அ) கட்டி ஆ) **கட்டுதல்**
இ) கட்டினான் ஈ) கட்டிய

வாழ் - என்ற சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக. (GSTP/2022), (DMGS/23)
அ) வாழ்ந்தான் ஆ) வாழ்ந்து
**இ) வாழ்க்கை** ஈ) வாழ்ந்த

'பிடி'-என்ற சொல்லின் வினையெச்சம் கண்டறிக. (RAGS/2023)
அ) பிடித்தாள் ஆ) **பிடித்து**
இ) பிடித்த ஈ) பிடித்தல்

"நட" என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று அறிக. (RAGS/2023)
அ) நடந்த ஆ) நடந்து
இ) நடத்தல் **ஈ) நடக்கிறது**

'வா'-என்ற சொல்லுக்குரிய பெயரெச்சத்தை கண்டறிக. (RAGS/2023)
அ) வருதல் ஆ) வந்தான்
**இ) வந்த** ஈ) வந்து

'அஞ்சி' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரையும் கண்டறிக (GSGS/2023)
அ) அஞ்சினார் ஆ) **அஞ்சினர்**
இ) பயந்தனர் ஈ) அஞ்சா

'வா' எனும் வேர்ச்சொல் கொண்டமையும் வினையாலணையும் பெயரைக் கண்டறிக. (GSGS/2023)
**அ) வந்தவர்** ஆ) வந்தான்
இ) வந்து ஈ) வந்த

'வாழ்' என்பதன் தொழிற்பெயரினைக் கண்டறிக (GSGS/2023)
அ) வாழ்ந்தேன் ஆ) **வாழ்க்கை**
இ) வாழ்ந்தவர் ஈ) வாழ்ந்த

வேர்ச்சொல்லில் தொழிற்பெயர் காண்க (CAGS/2022)
"ஓடு"
**அ) ஓடுதல்** ஆ) ஓடிய
இ) ஓடியவன் ஈ) ஓடி

வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக (CAGS/2022)
"ஓடு"
அ) ஓடியவன் ஆ) ஓடிய
இ) ஓடுதல் **ஈ) ஓடி**

தொழிற்பெயரைத் தேர்ந்தெடு (SFGS/2023)
வாழ்
அ) வாழ்வு ஆ) வாழ்தல்
**இ) வாழ்க்கை** ஈ) வாழ்வான்

வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் காண்க - 'படி' (EO1GS/2022)
அ) படித்தல் ஆ) படித்த
இ) படித்து **ஈ) படித்தான்**

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க : (EO1GS/2022)
"பாடு"
அ) பாடினான் ஆ) பாடுதல்
இ) பாடினேன் **ஈ) பாடியவன்**

வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்று : (EO1GS/2022)
பாடு
அ) பாடினான் ஆ) **பாடி**
இ) பாடிய ஈ) பாடப்பட்ட

வேர்ச்சொல்லில் தொழிற் பெயர் காண்க. (GSTP/2022)
'பெறு'
அ) பெற்றவன் ஆ) பெற்ற
இ) பெற்று **ஈ) பெறுதல்**

வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க (GSTP/2022)
'பொறு'
**அ) பொறுத்தவர்** ஆ) பொறுத்தல்
இ) பொறுத்து ஈ) பொறுத்தார்

'கேள்'- என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்று கண்டறிக. (PSGS/2022)

அ) கேட்ட　　ஆ) கேட்டு
**இ) கேட்டான்**　　ஈ) கேட்டல்

வேர்ச்சொல்லின் எதிர்மறை தொழிற்பெயரைக் காண்க (PSGS/2022)
-'நட'
அ) நடத்தல்　　ஆ) நடந்த
**இ) நடவாமை**　　ஈ) நடந்தவன்

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க. "பாடு" (ADGS/2022)
அ) பாடினான்　　ஆ) பாடுவான்
இ) பாடுகிறான்　　**ஈ) பாடுதல்**

பார் - என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்ச வடிவம் தருக. (ADGS/2022)
அ) பார்த்து　　**ஆ) பார்த்த**
இ) பார்த்தான்　　ஈ) பார்த்தது

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க. (ADGS/2022)
"படி"
அ) படித்தான்　　ஆ) படிப்பாள்
**இ) படித்தல்**　　ஈ) படிக்கிறான்

வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க- (VCGS/2022)
கொடு.
அ) கொடுத்த　　**ஆ) கொடுத்தல்**
இ) கொடுத்து　　ஈ) கொடுத்தவன்

வா-என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரை எழுதுக : (SDGS/2022), (CSGS/2023)
**அ) வந்தவர்**　　ஆ) வந்தான்
இ) வருதல்　　ஈ) வந்த

வேர்ச்சொல்லை வினையெச்சமாக மாற்றுக. (SDGS/2022)
'பெறு'
**அ) பெற்று**　　ஆ) பெற்றவன்
இ) பெறுதல்　　ஈ) பெற்றான்

வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக: (FAGS/2022)
வா
அ) வந்த　　ஆ) வந்தான்
இ) வந்தவன்　　**ஈ) வந்து**

வேர்ச்சொல்லைக் கொண்டு தொழிற்பெயரை உருவாக்கு : (FAGS/2022)
நடி
அ) நடித்தான்　　**ஆ) நடித்தல்**
இ) நடித்து　　ஈ) நடித்த

வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு (FAGS/2022)
உணர்
அ) உணர்ந்தான்　　**ஆ) உணர்ந்தோர்**
இ) உணர்வான்　　ஈ) உணர்தல்

வேர்ச் சொல்லைக் கொடுத்து தொழிற்பெயரை உருவாக்கல் (REGS/2022)
கொடு
அ) கொடுத்து　　**ஆ) கொடுத்தல்**
இ) கொடுக்கிறான்　　ஈ) கொடுத்த

வேர்ச் சொல்லுக்குரிய வினைமுற்றைக் கண்டுபிடி (REGS/2022)
போ
**அ) போனான்**　　ஆ) போகிற
இ) போகின　　ஈ) போகுவார்

'படி' என்பதன் வினையாலணையும் பெயர் (REGS/2022)
அ) படித்தான்　　**ஆ) படித்தவர்**
இ) படித்த　　ஈ) படித்தல்

'கற்றான்' - என்பதன் வேர்ச்சொல் அறிக. (CAGS/2022)
**அ) கல்**　　ஆ) கற்ற
இ) கற்று　　ஈ) கற்றா

வேர்ச்சொல் காண்க - தந்தான் (CAGS/2022), (FAGS/2022)
அ) தந்த　　ஆ) தந்து
இ) தர　　**ஈ) தா**

வரைந்து - வேர்ச் சொல்லை கண்டறி.. (GSTP/2022)
அ) வரைதல்　　ஆ) வரைந்தான்
**இ) வரை**　　ஈ) வரைந்த

எறிந்தான் - வேர்ச்சொல்லைத் தருக (GSTP/2022)
அ) எறிந்த　　**ஆ) எறி**
இ) எறிதல்　　ஈ) எறிந்து

'பாடினாள்' - வேர்ச்சொல்லைத் தருக. (DPGS/2022)
அ) பா　　ஆ) வா
**இ) பாடு**　　ஈ) ஆடு

வேர்ச்சொல்லை தேர்வு செய்தல் (PSGS/2022)
எழுதுகிறாள்
அ) எழுதுகின்றார்　　**ஆ) எழுது**
இ) எழுதுவாள்　　ஈ) எழுதுகின்றாள்

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க. (AOGS/2022)
வாழியர்
**அ) வாழ்**　　ஆ) வாழி
இ) வா　　ஈ) வாழிய

வேர்ச்சொல்லை தேர்வு செய்க. (VCGS/2022)
"சொன்னார்"
**அ) சொல்**　　ஆ) சொன்ன
இ) சொன்　　ஈ) சொல்ல

நடத்தல் - என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக. (FAGS/2022)
அ) நடந்த　　**ஆ) நட**
இ) நடந்து　　ஈ) நடந்தவர்

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க : (FAGS/2022)
கேட்டனன்
அ) கேல்　　ஆ) கேட்க
இ) கேட்ட　　**ஈ) கேள்**

ஓடியவர் என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக. (FAGS/2022)
அ) ஓடிய　　**ஆ) ஓடு**
இ) ஓடி　　ஈ) ஓடினான்

வேர்ச்சொல்லைத் தெரிவு செய்க (REGS/2022)
'மகிழ்வித்தனன்'
அ) மகிழ்ச்சி　　**ஆ) மகிழ்**
இ) மகிழ்வி　　ஈ) மகிள்

வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல் (GSGS/2023)
தேடுகிறான்
அ) தேடிய ஆ) தேடு
இ) தேடினான் ஈ) தேடி

## TNPSC Old Questions
## பொதுத்தமிழ்

வேர்ச்சொல் கண்டறிக. (CCSE2T/2024)
நைந்தான்
அ) நஞ்சு ஆ) நைந்து
இ) நஞ்சன் ஈ) ஐந்து
உ) விடை தெரியவில்லை

கொடுக்கப்பட்டுள்ள வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக்கண்டு எழுதுக. (CCSE2T/2024)
'அறை'
அ) அறைதல் ஆ) அறைந்த
இ) அறைந்தவர் ஈ) அறையும்

'படி' என்னும் வேர்ச்சொல்லின் தன்மை ஒருமை எதிர்காலம் காட்டும் வினைமுற்றை எழுதுக. (CCSE2T/2024)
அ) படிக்கிறேன் ஆ) படித்தேன்
இ) படிப்போம் ஈ) படிப்பேன்

வேர்ச்சொல்லை தேர்வு செய்க.
மலர் வீட்டுக்குச் சென்றாள். (CCSE4GT/2024)
அ) சென்ற ஆ) செல்ல
இ) செல் ஈ) சென்று
உ) விடை தெரியவில்லை

'வளர்' என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்க. (GTGS-2022)
அ) வளர்த்தல் ஆ) வளர்ந்து
இ) வளர்த்தார் ஈ) வளர

பொருத்துக: (GTBA-14)
a) நடந்தான் 1. தொழிற்பெயர்
b) நடந்த 2. வினையெச்சம்
c) நடந்து 3. பெயரெச்சம்
d) நடத்தல் 4. வினைமுற்று

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 2 | 3 | 1 | 4 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

நில் - என்னும் வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைத் தேர்ந்தெடு: (SSGT-2013)
அ) நின்று ஆ) நின்ற
இ) நிற்க ஈ) நிற்றல்

'மிக்க' - இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க. (SGTS-2012)
அ) மிக ஆ) மிகல்
இ) மிகு ஈ) மிகுதி

'நட்டு' - இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க. (SGTS-2012)
அ) நாடு ஆ) நட
இ) நடு ஈ) நாட்டு

'நிறுத்தாதீர்' - இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க. (SGTS-2012)
அ) நிறுத்து ஆ) நின்று
இ) நின்ற ஈ) நிறு.

'கல்லாமை' - இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க. (SGTS-2012)
அ) கல் ஆ) கல்லு
இ) கற்று ஈ) கற்ற.

'படைத்தோன்' - இச்சொல்லின் வேர்ச்சொல்லை காண்க. (SGTS-2012)
அ) படையன் ஆ) படையும்
இ) படையா ஈ) படை